# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
## ஏழாம் பத்து
## ஸர்வஶக்தனான எம்பெருமான் திறத்தில், ஸாதனபலமாகத் திருவாய்மொழி பாடுவித்த உபகாரத்திற்குக் கைம்மாறு இலாமையைப் பேசுதல்

## முதல் திருவாய்மொழி - உண்ணிலாவிய
## 'எம்பெருமான் தன் திருவடிகளில் சேராதபடி இன்னும் இந்த்ரியங்களாலே எத்தனை நாள் நலிவிப்பனோ?' என்று ஆழ்வார் ஓலமிடுதல்

** உள் நிலாவிய ஐவரால் குமை
தீற்றி * என்னை உன் பாத பங்கயம் *
நண்ணிலா வகையே * நலிவான்
இன்னம் எண்ணுகின்றாய் **
எண் இலாப் பெரு மாயனே! இமையோர்கள்
ஏத்தும் * உலகம் மூன்றுடை *
அண்ணலே! அமுதே! அப்பனே! *
என்னை ஆள்வானே! 1

என்னை ஆளும் வன் கோ ஓர் ஐந்து இவை பெய்து *
இராப் பகல் மோதுவித்திட்டு *
உன்னை நான் அணுகா வகை *
செய்து போதி கண்டாய் **
கன்னலே! அமுதே! கார் முகில் வண்ணனே! *
கடல் ஞாலம் காக்கின்ற *
மின்னு நேமியினாய்! *
வினையேனுடை வேதியனே! 2

வேதியா நிற்கும் ஐவரால் * வினையேனை
மோதுவித்து * உன் திருவடிச்
சாதியா வகை * நீ தடுத்து
என் பெறுதி? அந்தோ! **
ஆதி ஆகி அகலிடம் படைத்து * உண்டு உமிழ்ந்து
கடந்து இடந்திட்ட *
சோதி நீள் முடியாய்! *
தொண்டனேன் மதுசூதனனே! 3

சூது நான் அறியா வகை * சுழற்றி ஓர்
ஐவரைக் காட்டி * உன் அடிப்
போது நான் அணுகா வகை *
செய்து போதி கண்டாய் **
யாதும் யாவரும் இன்றி நின் அகம் பால்
ஒடுக்கி * ஓர் ஆலின் நீள் இலை *
மீது சேர் குழவி! *
வினையேன் வினை தீர் மருந்தே! 4

தீர் மருந்து இன்றி ஐந்து நோய் அடும் *
செக்கில் இட்டுத் திரிக்கும் ஐவரை *
நேர் மருங்கு உடைத்தா அடைத்து *
நெகிழ்ப்பான் ஒக்கின்றாய் **
ஆர் மருந்து இனி ஆகுவார்? * அடல் ஆழி
ஏந்தி அசுரர் வன் குலம் *
வேர் மருங்கு அறுத்தாய்! *
விண்ணுளார் பெருமானேயோ! 5

விண் உளார் பெருமாற்கு அடிமை செய்வாரையும் *
செறும் ஐம்புலன் இவை *
மண்ணுள் என்னைப் பெற்றால் * என் செய்யா
மற்று நீயும் விட்டால்? **
பண் உளாய்! கவி தன் உளாய்! *
பத்தியின் உள்ளாய்! பரம் ஈசனே! * வந்து என்
கண் உளாய்! நெஞ்சுளாய்! * சொல் உளாய்!
ஒன்று சொல்லாயே 6

ஒன்று சொல்லி ஒருத்தினில் நிற்கிலாத *
ஓர் ஐவர் வன் கயவரை *
என்று யான் வெல் கிற்பன் * உன்
திரு அருள் இல்லையேல்? **
அன்று தேவர் அசுரர் வாங்க *
அலை கடல் அரவம் அளாவி * ஓர்
குன்றம் வைத்த எந்தாய்! *
கொடியேன் பருகு இன்னமுதே! 7

இன்னமுது எனத் தோன்றி * ஓர் ஐவர்
யாவரையும் மயக்க * நீ வைத்த
முன்ன மாயம் எல்லாம் * முழு
வேர் அரிந்து ** என்னை உன்
சின்னமும் திரு மூர்த்தியும் * சிந்தித்து ஏத்திக்
கை தொழவே அருள் எனக்கு *
என் அம்மா! என் கண்ணா! *
இமையோர் தம் குல முதலே! 8

குல முதல் அடும் தீவினைக் * கொடு வன் குழியினில்
வீழ்க்கும் ஐவரை *
வல முதல் கெடுக்கும் * வலமே
தந்தருள் கண்டாய் **
நில முதல் இனி எவ்வுலகுக்கும் * நிற்பன
செல்வன என * பொருள்
பல முதல் படைத்தாய்! *
என் கண்ணா! என் பரஞ்சுடரே! 9

என் பரஞ்சுடரே! என்று உன்னை அலற்றி * உன்
இணைத் தாமரைகட்கு *
அன்புருகி நிற்கும் அது நிற்கச் *
சுமடு தந்தாய் **
வன் பரங்கள் எடுத்து ஐவர் திசை திசை *
வலித்து எற்றுகின்றனர் *
முன் பரவை கடைந்து * அமுதம்
கொண்ட மூர்த்தியோ! 10

** கொண்ட மூர்த்தி ஓர் மூவராய்க் * குணங்கள்
படைத்து அளித்துக் கெடுக்கும் * அப்
புண்டரீகக் கொப்பூழ்ப் * புனற்
பள்ளி அப்பனுக்கே **
தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன் *
சொல் ஆயிரத்துள் இப்பத்தும் *
கண்டு பாட வல்லார் * வினை
போம் கங்குலும் பகலே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---